# முந்திரி சாகுபடியில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்

நமது நாட்டின் அதிக அந்நிய செலவாணியை ஈட்டித்தரும் விவசாய விளைபொருட்களுள் முந்திரி ஒரு இன்றியமையாத பயிராகும். தமிழகத்தில் ஏறத்தாழ ஒரு லட்சம் ஹெக்டரில் பயிரிடப்படும், இப்பயிர், அரியலூர், கடலூர், விழுப்புரம், தேனி, திருநெல்வேலி, கன்னியாகுமரி போன்ற இடங்களில் அதிகமாக பயிரிடப்பட்டு வருகின்றது. தமிழகத்தில் உற்பத்தித் திறன் மகாராஷ்டிரா, கேரளா போன்ற மாநிலங்களின் உற்பத்தித் திறனோடு ஒப்பிடும்போது குறைவாகவே உள்ளது. இதற்கு பயிர்பாதுகாப்பு முறைகளை சரிவர கடைப்பிடிக்காததே முக்கிய காரணமாகும்.

முந்திரியைத் தாக்கும் முக்கிய பூச்சிகளான தண்டு மற்றும் வேர் துளைப்பான், தேயிலைக் கொசு, தளிர்பிணைப்பான் புழு, மாவுப்பூச்சி, பூப்பேன், இலை சுருட்டுப்புழு, கம்பளிப்புழு மற்றும் கொட்டைத் துளைப்பான் போன்ற பூச்சிகள் ஏறக்குறைய 60% வரை விளைச்சல் இழப்பை ஏற்படுத்துகின்றன.

## தண்டு மற்றும் வேர் துளைப்பான்

இப்பூச்சி கோடை காலத்தில்தான் அதிக சேதத்தை ஏற்படுத்துகிறது. இப்புழுக்கள் மரத்தின் உட்பகுதியை தின்று சேதம் ஏற்படுத்துவதால் ஆரம்ப அறிகுறிகள் தென்படும்பொழுதே கட்டுப்படுத்த வேண்டும். தாக்கப்பட்ட மரம் காய்ந்து பட்டுவிடும் புழுக்கள் முட்டையிலிருந்து வெளிவந்தவுடனேயே மரப்பட்டையை துளையிட்டு உள்ளே நுழைந்து கொள்ளும். புழுக்கள் துளைத்த பகுதியிலிருந்து பழுப்பு நிறத்தில் பிசின் கசிந்து கெட்டியாகி இருக்கும். புழுக்கள் மென்று தின்று வெளித்தள்ளும் சக்கைகளும் அடிமரத்தை சுற்றிலும் கிடக்கும்.

வளரும் புழுக்கள் 6-8 மாதங்களில் வேர்பகுதி முழுவதையும் தாக்கிவிடம். இலைகள் மஞ்சள் நிறமாக மாறி, உதிர்ந்துவிடும். இதனால் இப்பூச்சி மரக்கொல்லி என அழைக்கப்படுகின்றது.

## கட்டுப்படுத்துதல்

- தோப்பை உழவு செய்து சுத்தமாக வைத்திருக்க வேண்டும்
- காய்ந்து போன மரங்களை வேரோடு தோண்டி எடுத்துவிட வேண்டும்
- புழுக்கள், கூட்டுப்புழு, வண்டுகள் ஆகியவற்றை சேகரித்து நசுக்கி கொன்றுவிட வேண்டும்
- பிசின் கசிதலை கண்டவுடன் மானோகுரோட்டாபாஸ் 20 மிலி மருந்தை 20 மிலி தண்ணீருடன் வேர்மூலம் செலுத்த வேண்டும்.
- வண்டுகள் மரங்களில் முட்டையிடுவதை தடுப்பதற்கு உருக்கிய தாருடன் (1 கிலோ), மண்ணெண்ணெய் (2 லிட்டர்) கலந்து பெயின்ட் போல தயாரித்து

மரப்பகுதியின் தரையிலிருந்து 1 மீட்டர் உயரத்திற்கு நன்றாக பூசிவிட வேண்டும்.

- தாக்கப்பட்ட மரத்தை சுற்றி 50 சதவிகித கார்பரில் நனையும் தூள் மருந்தினை ஒரு லிட்டருக்கு 4 கிராம் அளவில் கலந்து மண்ணில் ஊற்ற வேண்டும்.

### மாவுப்பூச்சி

இப்பூச்சியானது இளம் தளிர் மற்றும் பூங்கொத்துகளிலிருந்து சாற்றை உறிஞ்சுவதால் பூங்கொத்துக்கள் வாடி காய்ந்துவிடும். சிகப்பு மற்றும் கறுப்பு எறும்புகளின் நடமாட்டம் இருக்கும். பளப்பளப்பான ஒட்டும் தன்மை கொண்ட தேன் போன்ற கழிவுகளும் அதன்மேல் கரும்பூசண வளர்ச்சியும் காணப்படும்.

### கட்டுப்படுத்துதல்

- பாதிக்கப்பட்ட சிம்புகள் வெட்டி எடுக்க வேண்டும்
- சேதம் குறைவாக இருக்கும்பொழுது வேப்பெண்ணெய் 2 சதம் (அ) வேப்பங்கொட்டை பருப்புச்சாறு 5 சதம் (அ) மீன் எண்ணெய் சோப்பு 25 கி/லி. தெளிக்க வேண்டும்
- சேதம் அதிகமாக இருக்கும் போது புரோபெனோபாஸ் 2 மி.லி/லி. என்ற அளவில் தெளிக்க வேண்டும்

### தேயிலைக் கொசு

இப்பூச்சியானது இளந்தளிர், பூங்கொத்து மற்றும் பிஞ்சு உருவாகும் பருவங்களில் தாக்கும். இப்பூச்சிகள் நச்சுத்தன்மை கொண்ட உமிழ்நீரை உள்ளே செலுத்தி சாற்றை உறிஞ்சுவதால் தாக்கப்பட்டட தளிர்கள், பூங்கொத்துகள் மற்றும் பிஞ்சு கொட்டைகள் காய்ந்து கருகிவிடுகின்றன. தாக்கப்பட்ட இளம் தளிர்களில் சிறுசிறு கரும்புள்ளிகள் தோன்றி பிசின் வடியும். பின்னர் தளிர் முழுவதும் காய்ந்துவிடும். பூங்கொத்துகள் தீயினால் கருகியது போல் இருக்கும். இளம் கொட்டைகளிலும், பிஞ்சுகளிலும் கருப்பு நிற தழும்புகள் காணப்படும். பாதிப்பு அதிகமானால் தாக்குண்ட கிளைகள் முழுவதும் கருகிவிடும்.

### கட்டுப்படுத்துதல்

- மூன்று முறை மருந்து தெளிப்பு மேற்கொள்ள வேண்டும்
- டிசம்பர்-ஜனவரி மாதத்தில் மானோகுரோட்டாபாஸ், ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மிலி என்ற அளவில் தெளிக்க வேண்டும்
- ஜனவரி-பிப்ரவரி மாதத்தில் அதாவது முந்திரி பூக்கும் தருவாயில் எண்டோசல்பான், ஒருலிட்டர் தண்ணீருக்கு 2 மி.லி என்ற அளவில் தெளிக்க வேண்டும்
- பிப்ரவரி-மார்ச் மாதத்தில், கார்பரில் 50 சத நனையும் தூள் மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளவில் கரைத்து தெளிக்க வேண்டும்

- பூச்சி தாக்கப்பட்ட சிம்புகளை வெட்டி எடுத்து, போர்டோமிக்சர் பசை தயாரித்து வெட்டி எடுத்த இடத்தில் தடவ வேண்டும்
- போர்டோமிக்சர் (1%) தெளிக்க வேண்டும்
- மருந்து தெளிக்கும்போது தோட்டத்தின் அருகில் உள்ள கொய்யா, வேப்பமரம், முருங்கை மரம் போன்றவற்றிற்கும் மருந்து தெளிக்க வேண்டும்.

### கம்பளிப் புழு

இப்புழுவானது பகல் பொழுதில் மரங்களின் அடிக்கட்டை பகுதியில் கூட்டமாக இருக்கும். இரவு நேரங்களில் படையாக திரண்டு இலைகள் கடித்து தின்றுவிட்டு வெறும் காம்புகள் மட்டும் இருக்கும்.

### கட்டுப்படுத்தும் முறை

- தோப்பை சுத்தமாக வைத்திருக்க வேண்டும்
- முட்டைகளை பொறுக்கி அழிக்க வேண்டும்
- புழுக்களை பார்த்தவுடன் மோனோகுரோட்டோபாஸ் 36 WSC 0.05% (W 1.5 மிலி/லி) தெளிக்க வேண்டும்
- கார்பரில் 10 சதவிகித தூவும் தூளை அடிமரத்திலும், மரத்தினை சுற்றி நான்கு அடி சுற்றளவிற்கு தூவ வேண்டும்

### பூப்பேன்

இலை, பூவில் உள்ள சாற்றை உறிஞ்சுவதால் இலைகள் காய்ந்து கருகிவிடும். பூங்கொத்தின் காம்புகளிலும் பிஞ்சு கொட்டைகளிலும் சொறி போன்ற பழுப்பு நிற புள்ளிகள் தோன்றும். பூக்கள் கருகி கீழே விழும். இளம் பிஞ்சு மற்றும் கொட்டைகள் முற்றுவதற்கு முன்பாகவே காய்ந்துவிடும். இப்பூச்சியினால் கிட்டதட்ட 16% பிஞ்சுகள் கொட்டிவிடும். கொட்டைகளின் வடிவம் மாறி, பருப்பின் வளர்ச்சி குறையும்.

### கட்டுப்படுத்தும் முறைகள்

இதை கட்டுப்படுத்த எண்டோசல்பான் 35 CC 0.05% (1.5 மி.லி/லி) பூக்கும் மற்றும் காய்க்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும்.